# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க,
# சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகச் சட்டம்

---

*(1992, ஆகஸ்ட் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1992, ஆகஸ்ட் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

விலை : ரூபா 1·50 — தபாற் செலவு : ரூபா 1·58

# 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகச் சட்டம்

[1992. ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஓ. 49/89
2037

**சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகம் ஒன்றைத் தாபிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். கருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் திகதியும்.

## பாகம் I

### சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகத்தைத் தாபித்தல்

2. (1) "சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகம்" என அழைக்கப்படவேண்டிய (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" என அழைக்கப்படும்) நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகத்தைத் தாபித்தல்.

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. நிறுவகத்தின் குறிக்கோள்கள் சமூக வேலையையும் சமூக அபிவிருத்திக் கல்வியையும் மேம்படுத்தல் அத்துடன் குறிப்பாகப் பின்வருவனவாகவுமிருத்தல் வேண்டும் :— நிறுவகத்தின் குறிக்கோள்கள்.

(அ) சமூக வேலை இத்துடன் சமூக அபிவிருத்திக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அத்துடன் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை கூறல்;

(ஆ) சமூக வேலை அத்துடன் சமூக அபிவிருத்தி என்பவற்றில் பட்டப்படிப்பு அத்துடன் பட்டப் பின்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துதல்;

(இ) சமூக நல முறைமை அத்துடன் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் கற்கைகளை நடாத்துதலும் மேம்படுத்துதலும்;

(ஈ) தொழில்நுட்பவியலில் இசைவாக்கம் உட்பட, சமூக வேலையிலும், சமூக அபிவிருத்திக் கல்வி முறையிலும் புத்தாக்கப்பயில்வுகளை ஆரம்பித்தலும், மேம்படுத்தலும்;

(உ) சமூக நலன் முறைமையிலுள்ள ஆளணியினரின் உயர்தொழில் தகைமையையும், முகாமைத்துவத் தகைமையையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்;

(ஊ) சமூக வேலை அத்துடன் சமூக அபிவிருத்தி என்பவற்றில் நிபுணத்துவ சேவைகளை அரசாங்க அத்துடன் அங்கீகாரமளிக்கப்பட்ட அமைப்புக்களுக்கு கிடைக்கச் செய்தல்; அத்துடன்

(எ) ஒத்த குறிக்கோள்களைக்கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைதல்.

நிறுவகத்தின் தத்துவங்கள்

4. நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல், வைத்திருத்தல், விற்றல், குத்தகைக்குவிடுதல், ஈடுவைத்தல், கொடுத்து மாற்றல் அல்லது அதனை வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

ஆயின், எவ்வாறாயினும் நிறுவகத்தின் அசைவற்ற ஆதனம் எதுவும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி விற்பனை செய்யப்படுதலாகாது;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்புக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், வைப்புக் கணக்குகள் என்பவற்றை திறத்தலும், பேணுதலும்;

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல்;

(ஈ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதலும் அத்துடன் புரிதலும்;

(உ) (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எப்பிணைப் பொறுப்பில் நம்பிக்கைப்பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வது சட்டபூர்வமானதோ அப்பிணைப் பொறுப்பு எதிலும், பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை முதலீடு செய்தல் அல்லது அசைவற்ற ஆதனத்தை இலங்கையில் கொள்வனவு செய்வதில் அத்தகைய எவையேனும் பணங்களை முதலீடு செய்தல் அல்லது முதலீடுகளை வேறுபடுத்தல் அல்லது உடனடியான செலவினத்துக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களில் ஏதேனும் பகுதியை ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பிலிடுதல்;

(ஊ) சமூக வேலையில் அத்துடன் சமூக அபிவிருத்தியின் ஏதேனும் அம்சம் தொடர்பிலான ஆராய்ச்சியையும், மதிப்பாய்வுகளையும் புலனாய்வுகளையும் தொடங்குதல், மேம்படுத்தல், கொண்டு நடாத்துதல், அத்துடன் ஒன்றிணைத்தல்;

(எ) சமூக நலனில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கும் ஏனைய ஆளணியினருக்கும் பயிற்சி நெறிகளையும் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துதல்;

(ஏ) சமூக அபிவிருத்தி தொடர்பிலான குறிப்பான ஆராய்ச்சிக் கருத்திட்டத்திற்காக அல்லது கருத்திட்டங்களுக்காக, எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடைகளை வழங்குதல்;

(ஐ) கற்கும் நோக்கங்களுக்காகவும், பயிற்சி நோக்கங்களுக்காகவும், நிலையங்களைத் தாபித்தலும், அவற்றுக்குச் சாதனமிடுதலும், அவற்றைப் பேணுதலும்;

(ஒ) நிறுவனத்தின் நோக்கங்களுக்காக, நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும் நிறுவுதலும், அவற்றுக்குச் சாதனமிடுதலும், அவற்றைப் பேணுதலும் அத்துடன் சமூக அபிவிருத்தியில் ஆராய்ச்சிக்கும் கற்கைகளுக்கும் அவசியமானவையான ஏனைய சேவைகளை ஏற்பாடு செய்தலும்;

(ஓ) நிறுவகத்தின் குறிக்கோள்களை, முழுமையாக அல்லது பகுதியளவில் ஒத்த குறிக்கோள்களைக்கொண்டுள்ள, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ளவரான கல்விசார் நிறுவனங்களுடன் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புக்காகவும், ஆளணியினரையும் மாணவர்களையும் பரிமாற்றம் செய்வதற்காகவும் அத்துடன் பொதுவாக அவர்களின் பொதுக் குறிக்கோள்களுக்கு உசிதமானவையாயிருக்கக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்காகவும் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல்;

(ஔ) நிறுவகத்தால் வழங்கப்படும் ஏதேனும் சேவைக்கான கட்டணங்களை அல்லது இறுப்பனவுகளை விதித்தல்;

(க) இச்சட்டத்தால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ங) நிறுவனத்தின் அபிப்பிராயப்படி அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான அல்லது உசிதமானவையான அல்லது இடைநேர்வினைவானவையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

5. நிறுவகமானது 4 ஆம் பிரிவால் அதற்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, பின்வரும் கல்வித்துறைத் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும் :— நிறுவகத்தின் கல்வித்துறைத் தத்துவங்கள்.

(அ) நிறுவகத்தின் அனுமதிபெற நாடுகின்ற ஆட்களால் அல்லது நிறுவகத்தின் மாணவர்களால் பல்கலைக்கழகங்களில் அல்லது கல்வி நிலையங்களில் சித்தியெய்தப்பட்ட பரீட்சைகளையும் பின்பற்றப்பட்ட படிப்பின் அல்லது கற்கையின் காலப்பகுதிகளையும் அத்தகைய பரீட்சைகளில் தராதரத்தையும் அத்தகைய பல்கலைக்கழகங்களில் அல்லது கல்வி நிலையங்களில் பின்பற்றப்பட்ட கற்கைப் பாடநெறிகளின் காலநீட்சியையும் கருத்திற்கொண்டு அவற்றை அங்கீகரித்தலும், அதே விடயங்களைக் கருத்திற்கொண்டு அத்தகைய அங்கீகாரத்தை எந்த நேரத்திலும் மீளப்பெறுதலும்;

(ஆ) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பேராசிரியர் பதவிகளையும் ஏனைய கல்வித்துறைப் பதவிகளையும் நிறுவுதல்;

(இ) புலமைப்பரிசில்களையும் பதக்கங்களையும் ஏனைய பரிசுகளையும் வழங்குதல்; அத்துடன்

(ஈ) அமைச்சரின் அங்கீகாரத்துடன் கல்விக் கல்லூரிகளையும் அவற்றையொத்த சமூக அபிவிருத்தி கல்வி நிறுவனங்களையும் இணைந்த நிறுவனங்களாகப் பதிவுசெய்தலும் அத்தகைய பதிவுக்கான நிபந்தனைகளை விதிமூலம் விதித்துரைத்தலும்.

நிறுவகத்தின் நிர்வாகம் போவைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல்.

6. (1) நிறுவக அலுவல்களின் நிர்வாகமும், முகாமையும், கட்டுப்பாடும் (இதனகத்துப்பின்னர் "போவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் போவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) போவையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்தின் மீது அல்லது அதற்கு அளிக்கப்பட்ட, குறித்தொதுக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(3) அதற்கென ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணங்க, ஐந்தாண்டு வேலைத்திட்டம் ஒன்றையும், ஆண்டுத் திட்டத்தையும் நிகழ்ச்சித் திட்டத்தையும், ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தையும் தயாரிப்பது போவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தையும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுவதற்கென அது சமர்ப்பித்தலும் வேண்டும்,

போவையின் அமைப்பு,

7. (1) போவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள் ;

(1) சமூகநலன் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் இவர் தவிசாளராயிருத்தல் வேண்டும் (இவர் இதனகத்துப் பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ; அத்துடன்,

(ii) 11 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி.

(ஆ) பிற உறுப்பினர்கள் —

(i) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உயர்கல்வி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் ;

(iii) அமைச்சரால் நியமிக்கப்பட்ட நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதி ஒருவர்; அத்துடன்

(iv) சமூகசேவை அத்துடன் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் உயர்தொழில் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ளவர்களான ஆட்களிடையே இருந்து, அமைச்சரால் நியமிக்கப்படும் வேறு எட்டு ஆட்கள்.

(2) ஆள் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராக வந்தால், அவ்வாள் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பேரவையின் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்ற பந்தியின் கீழ் நியமிக்கப்பட்டவரான பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் —

(அ) அமைச்சரால் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டால் ; அல்லது

(ஆ) அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் பதவி விலகி, அப்பதவி விலகல் அமைச்சரால் எழுத்து மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டால்,

அத்தகைய உறுப்பினர் என்ற பதவியை வறிதாக்கல் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர் ஒருவர் இறக்கும்விடத்து அல்லது பதவி விலகும்விடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும்விடத்து, இறந்த, பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில் உறுப்பினரொருவராக இருக்கவென அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பேரவை உறுப்பினர் முன்னரே தனது பதவியினின்றும் விலகினால் அல்லது இறப்பின் மூலம் அல்லது பதவியினின்றும் அகற்றப்படுவதன் மூலம் தனது பதவியை முன்னரே வறிதாக்கினால் ஒழிய, அவர் எந்த உறுப்பினருக்குப்பின் பதவிக்கு வந்தாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பத்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, தமது பதவிக்கான கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அமைச்சரானவர் அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

(6) ஒன்பதாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பத்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொவ்வொருவரும், அவர் இறப்பதன் மூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம், பதவியை முன்னதாகவே வறிதாக்கினால் ஒழிய, அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(7) பேரவையின் பதவி வழி உறுப்பினர் ஒவ்வொருவரும், எந்தப் பதவியின் பயனைக்கொண்டு பேரவையின் உறுப்பினரொருவராக அவர் வந்துள்ளாரோ அந்தப் பதவியை வகிக்கும் வரையில் அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(8) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பத்தியின் (iv) ஆம் உட்பத்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களில் அரைவாசியினர் ஒவ்வோர் இரண்டாவது ஆண்டிலும் ஓய்வுபெறுதல் வேண்டும்.

(9) ஒவ்வோர் இரண்டாவது ஆண்டிலும் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பத்தியின் (iv) ஆம் உட்பத்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களில் அரைப்பங்கினர் ஓய்வு பெறுதல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக, பேரவைக்கு முதன் முறையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் அமைச்சரால் அவ்வாறு குறித்துரைக்கப்பட்டவாறான நால்வரின் பதவிக்காலம் அவரது நியமனத் திகதியிலிருந்து இரண்டு ஆண்டு காலப்பகுதி முடிவில் முடிவுறுதல் வேண்டும்.

(10) மூன்றாம் உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலமாகத்தவிர வேறுவகையில் அவரது பதவியை வறிதாக்கும் எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(11) நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனம் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படலாம்.

நிறுவகத்தின் இலச்சினை.

8. நிறுவகத்தின் இலச்சினையானது —

(அ) பேரவை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கின்ற அத்தகைய ஆட்களின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்;

(ஆ) பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(ஈ) போரவையின் அனுமதியின்றியும் போரவை உறுப்பினர் ஒருவரின் சமூகத்திலன்றியும் ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவ்வுறுப்பினர் தான் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக ஆவணத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும்.

போரவையின் கூட்டங்கள்.

9. (1) தவிசாளர் அல்லது அவர் சமூகமாயிராதபோது நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி போரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், பணிப்பாளர் தலைமை அதிபதி ஆகிய இருவரும் சமூகமாயிராதபோது சமூகமாயிருக்கும் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டங்களில் தலைமை தாங்குதல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், போரவையின் நான்கு உறுப்பினர்களுக்குக் குறையாதோராயிருத்தல் வேண்டும்.

(3) போரவையின் கூட்டமெதிலும் முடிவு எடுத்ததற்கான எல்லா விடயங்களும் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாயிருக்கின்ற விடயத்தில் தவிசாளர் அல்லது போரவையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்கும் எவரேனும் வேறு உறுப்பினர் தனது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கு ஒன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) இவ்வுட்பிரிவின் மேற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாகப் போரவையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பாகவும் அதற்குச் சொந்த நடவடிக்கைமுறையினை ஒழுங்குபடுத்தலாம்.

(5) போரவையின் செயல் அல்லது முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருக்கின்றது என்ற காரணத்தால் மாத்திரம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது.

கல்வித்துறை அலுவல்கள் சபையை அமைத்தல்.

10. (1) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) நிறுவகத்தின் கல்வித்துறை அலுவல்கள் சபை ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கல்வித்துறை அலுவல்கள் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

பதவி வழிவந்த உறுப்பினர்கள் குறிப்பாக —

(i) பிரிவு 11 இன்கீழ் நியமிக்கப்பட்ட, நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ii) தவிசாளரினால் தாபிக்கப்பட்டவாறான, நிறுவகத்தின் கல்வித்துறைப் பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள்;

(iii) தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதிபதி;

(iv) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய இலங்கை பல்கலைக்கழகங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது நிறுவகத்தின் கல்வித்துறை அலுவல்களுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(4) சபையானது அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளுக்கு இணங்க நிறுவகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியெய்தியுள்ளவர்களும் விதித்துரைக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களுமான ஆட்கள் நிறுவகத்தின் பட்டங்களையும், டிப்ளோமாக்களையும், சான்றிதழ்களையும் ஏனைய கல்விச் சிறப்புக்களையும் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் எனப் போவைக்கு விதந்துரைத்தலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி சபையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) கல்வித்துறைக் கருமங்கள் எல்லாவற்றின்மீதும் போவைக்கு ஆலோசனை வழங்குதல்;

(ஆ) போவையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எக்கருமத்தையும் சீர்தூக்கி பார்த்து அறிக்கையிடுதல்;

(இ) நிறுவகத்தால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நடாத்தப்படும் கற்கைநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பன தொடர்பிலான கருமங்களில் போவைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் செய்தல்;

(ஈ) நிறுவகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சகர்களாக நியமனம் பெறுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைப் போவைக்கு விதந்துரைத்தல்;

(உ) போராசிரியர் பதவிகளையும் ஏனைய வித்துவத் தானங்களையும் நிறுவுதல், நீக்குதல் அல்லது இடைநிறுத்தல் சம்பந்தமாகப் போவைக்கு விதந்துரைத்தல்;

(ஊ) புலமைப் பரிசில்களையும் பதக்கங்களையும் வேறு பரிசுகளையும் வழங்குவதற்கான நிபந்தனைகளைப் போவைக்கு விதந்துரைத்தல்;

(எ) புலமைப் பரிசில்களையும், பதக்கங்களையும் பரிசுகளையும் வழங்குவதற்காகப் போவையால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளவர்களான அத்தகைய ஆட்களுக்குச் சிறப்புப் பரிசுகளையும் ஏனைய பரிசுகளையும் வழங்குவது தொடர்பாக போவைக்கு விதந்துரைத்தல்; அத்துடன்

(ஏ) பேரவையின் அனுமதியுடன் சபையின் உறுப்பினர்கள் தவிர்ந்த வேறு ஆட்களை உள்ளடக்குவதான குழுக்களை நியமனஞ் செய்தல்.

(6) மூன்றாம் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பிலான முடிவு எதுவும், சபையானது அத்தகைய கருமம் தொடர்பில் அதன் விதப்புரைகளைப் பதிவுசெய்து பேரவைக்கு அனுப்பி வைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாலொழிய, பேரவையினால் அல்லது எந்த அலுவலருக்கு அத்தகைய கருமம் தொடர்பாக ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப் பட்டுள்ளதோ அந்த அலுவலரொருவரினால் செய்யப்படுதலாகாது. அத்தகைய கருமம் தொடர்பில் பேரவையின் அல்லது அத்தகைய அலுவலரின் முடிவானது, சபையின் விதப்புரைக்கு முரணாக இருக்குமிடத்து பேரவை அல்லது அத்தகைய அலுவலர், சபையின் விதப்புரைகளைப் பின்பற்றாமைக்கான அதனது அல்லது அவரது காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

## பாகம் II

### நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதியையும் அத்துடன் பணியாட்டொகுதியினரையும் நியமித்தல்

*நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதியை நியமித்தல்.*

11. (1) அமைச்சரானவர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமை அதிபதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பணிப்பாளர் தலைமை அதிபதியொருவரை நியமிக்கலாம். இவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வித்துறை அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஓர்ம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமை அதிபதியானவர் இறப்பின்மூலம், பதவி விலகுவதன்மூலம் அல்லது பதவியினின்றும் அகற்றப்படுதல்மூலம் முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினால் ஒழிய அவருடைய நியமனத் தேதியிலிருந்து நான்கு ஆண்டு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமை அதிபதியானவர், பேரவையின் பொதுவான பணிப்புக்கு அமைவாக, நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகத்திற்கும் நிறுவகத்தின் பணியாட்தொகுதியினரின் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும். அவர் பேரவையின் முடிவுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்புடையவராதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானவை என அவரால் கருதப்படக்கூடியவரான கொள்கைகளையும் வழிவகைகளையும் பேரவை சீர்தூக்கிப் பார்ப்பதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி பேரவையால் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவரான அத்தகைய தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சபையின் அல்லது ஏனைய குழுவின் கூட்டமெதிலும் சமூகமாயிருப்பதற்கும், பேசுவதற்கும், வாக்களிப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(7) அமைச்சர் —

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி நிரந்தரமாகத் தமது கடமைகளைப் புரிய இயலாதவராக வந்தால்; அல்லது

(ஆ) அமைச்சரின் அபிப்பிராயப்படி மோசடித்தன்மையான அல்லது சட்டவிரோதத் தன்மையான அல்லது நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கு வெளிப்படையாக எதிரானதாக இருக்கும் செயலொன்றை அல்லது விடயமொன்றை பணிப்பாளர் தலைமையதிபதி செய்திருந்தால்; அல்லது

(இ) தேசியக் கொள்கைக்கு முரணாக பணிப்பாளர் தலைமையதிபதி செயலாற்றினால்;

பணிப்பாளர் தலைமையதிபதியை எழுத்துமூலம் பதவியினின்றும் அகற்றலாம்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியானது அவர் இறப்பதன்மேல் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியினின்றும் அகற்றப்பட்டதன்மேல் அல்லது அப்பதவி வகிப்பவர் அதன் சார்பில் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பிய கடிதத்தின்மூலம் பதவி துறப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டவரான எவரேனும் ஆள் (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி பணிப்பாளர் தலைமை அதிபதியாக மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(10) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால் அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமனம் ஒன்றைச் செய்யும்வரை பணிப்பாளர் தலைமை அதிபதியின் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு போரவையின் உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

(11) பணிப்பாளர் தலைமையதிபதி நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதி.

12. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அமைச்சரால் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவும் போரவை பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும், அவசியமாகக்கூடியவாறான, நிறுவகத்தின் அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல்;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாட்களுக்கும் கொடுக்கப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானிப்பதுடன், அவர்கள்மேல் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்; அத்துடன்

(இ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நலனுக்காக ஊழியர் சகாய நிதியங்களையும், திட்டங்களையும், தாபித்தலும் ஒழுங்குபடுத்தலும்.

(2) பேரவையானது அதன் எவையேனும் தத்துவங்களை, கடமைகளை, பணிகளை, பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி எந்தப் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணிப்பாளர் தலைமை அதிபதி, பேரவையின் பணிப்புகளுக்கு அமைவாக, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பேரவை தத்துவம் உடையதாதல் வேண்டும்.

13. குறித்த ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிய உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்ட எவரேனும் ஆளை நிறுவகமானது தொழிலுக்கமர்த்திக்கொண்டவிடத்து, அவ்வாளினால் நிறுவகத்திற்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி அத்தகைய ஒப்பந்தத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படல் வேண்டும்.

குறித்தசில ஒப்பந்தங்களின் நோக்கங்களுக்குச் செய்யப்பட்ட சேவை அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படல் வேண்டும் என்பது.

14. (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரேனும், அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளரினதும் ஒருப்பாட்டுடன் அதே போன்ற சம்மதத்துடன் நிறுவகத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்று சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

பகிரங்க அலுவலர்கள் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுதல்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பேரவையின் வேண்டுகோளின் பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர் கல்வி நிறுவகத்தின் அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் அவ்வலுவலரின் அல்லது சேவையாளரினதும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினதும் அந்த உயர்கல்வி நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலராலும் இணங்கிக் கொள்ளப்படக்கூடியவாறான ஓய்வூதிய உரிமைகள், சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நிபந்தனைகளின் மேல் அத்தகைய பணியாட் தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

## பாகம் III

### நிதி

நிறுவகத்தின் ஆரம்ப மூலதனம்.

15. (1) நிறுவகத்தின் ஆரம்ப மூலதனமானது பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் மூலம் அந்நோக்கத்திற்கென நிறுவகத்திற்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையாதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் மூலதனமானது சட்டத்தினால் அல்லது ஏதேனும் பாராளுமன்றத் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகைகளால் காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்படலாம்.

நிறுவகத்தின் நிதியம்.

16. (1) நிறுவகம் தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் நிதியத்திற்கு பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவையாவன :—

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) நிறுவகத்தால் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அதனால் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கைக்குள்ளேயிருந்தோ அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்தோ, எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையில் நிறுவகத்தால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) நிறுவகத்தின் நிதியிலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) இச்சட்டத்தின் கீழ் நிறுவகத்தின் தத்துவங்களையும் பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலில், புரிதலில், நிறைவேற்றுதலில் அதனால் பெறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் மூலம் அல்லது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**நிறுவகத்தின் நிதியாண்டு.**

17. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

18. பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றின் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

**பேரவை தொடர்பில் அமைச்சருக்குள்ள தத்துவங்கள்**

19. (1) அமைச்சரானவர், (பிரிவு 10 (3) அல்லது 10 (4) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் அல்லது ஏதேனும் கடமையைப் புரிதல் தவிர்ந்த) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகித்தல், அத்துடன் கடமைகளைப் புரிதல் என்பன பற்றியனவான அத்தகைய பொதுப் பணிப்புக்களை காலத்துக்குக்காலம், பேரவைக்கு எழுத்தில் வழங்கலாமென்பதுடன், பேரவை அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், நிறுவகத்தின் எல்லாச் செயற்பாடுகளும் அல்லது ஏதேனும் செயற்பாடு பற்றி அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும் என்று காலத்துக்குக் காலம் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் மேல் பேரவையானது அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அளித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர் பேரவையால் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தாண்டு வேலைத்திட்டத்தையும், ஆண்டுத் திட்டத்தையும், நிகழ்ச்சித்திட்டத்தையும், ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தையும் திருத்தங்களுடன் அல்லது திருத்தமின்றி அங்கீகரிக்கலாம்.

*அசைவுள்ள அத்துடன் அசைவற்ற அரச ஆதனம் நிறுவகத்துக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்பட வேண்டும் என்பது.*

20. (1) நிறுவகத்தின் நோக்கத்திற்கு அசைவற்ற அரச ஆதனம் ஏதேனும் தேவைப்படுமிடத்து அத்தகைய நோக்கமானது முடிக்குரிய காணிகள்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக்கொடையொன்று அல்லது குத்தகையொன்று செய்யப்படக்கூடிய நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்திற்கான அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக்கொடையொன்றுக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஏதேனும் ஆதனம் நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படுமிடத்து, அமைச்சர், கஜெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவகத்திற்குக் கைமாற்றி அதற்குரித்தாக்குதல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், அசைவுள்ள ஏதேனும் ஆதனம் சம்பந்தமான கட்டளை எதுவும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அரசின் அத்தகைய ஆதனத்தின்மேல் கட்டுப்பாட்டை வைத்திருக்கும் அமைச்சரின் ஒருப்பாடின்றிச் செய்யப்படலாகாது.

*நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென வசதிகள் முதலானவற்றை அரசு கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.*

21. நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென, அவசியமானவை எனக் கருதக்கூடியவாறான அத்தகைய காணி, கட்டிடம் அத்துடன் ஏனைய வசதிகள் என்பவற்றை அரசு ஏற்பாடு செய்யலாம்.

*பேரவை அதன் செயற்பாடுகள் பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பது.*

22. பேரவையானது நிறுவகத்தின் நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக அவ்வாண்டின் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றிய முழு விபரத்தையும் தருகின்ற அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அமைச்சரானவர் அதன் பிரதிகளைப் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிறுவகமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது.*

23. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிறுவகமானது அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவகம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

24. நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளாகவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்கள் ஆகக் கருதப்படுதல் வேண்டும். நிறுவகத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பது.

25. (1) (அ) நடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் — இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் செயலுக்கான பாதுகாப்பு.

இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தால் நன்னோக்கத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்படும் செயல் எதற்காகவும் நிறுவகத்திற்கு எதிராக;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் பேரவையின் உறுப்பினர், நிறுவகத்தின் அலுவலர் சேவையாளர் அல்லது முகவர் எவரினதும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக

அமைதல் ஆகாது.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மீது செய்யப்படும் ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் நடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில், அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல், நன்னோக்கத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

26. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அமைச்சர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(அ) நிறுவக அலுவலர்களினதும் அத்துடன் சேவையாளர்களினதும் வேதனம் உட்பட அவர்களினது சேவை நியதி, நிபந்தனைகள்;

(ஆ) நிறுவக அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஆட்சேர்ப்புத் திட்டமும் அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை முறையும்;

(இ) சபையின் அமைப்பும் அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்தலும்;

(ஈ) நிறுவகத்தின் ஐந்தாண்டு வேலைத்திட்டம், ஆண்டுத்திட்டம், நிகழ்ச்சித் திட்டம், ஆண்டு வரவுசெலவுத் திட்டம் என்பவற்றின் வடிவமும், அத்தகைய வேலைத்திட்டம், ஆண்டுத்திட்டம், நிகழ்ச்சித் திட்டம், வரவுசெலவுத் திட்டம் என்பவற்றைத் தயாரிக்க வேண்டிய முறையும்; அத்துடன்

(உ.) எத்தகைய கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தால் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது விதித்துரைக்கப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அத்தகைய வேறு கருமங்கள்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெத்தில் வெளியிடப்படவேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்தியதேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் கசெத்தில் வெளியிடப்பட்டதன் பின் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கேனும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எந்த தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

27. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு-7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.